# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2016 - 2017

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:..........................................................    நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. வடவரை வென்று இமயத்தில் விற்கொடி பொறித்த மன்னன்

அ) சேரன் செங்குட்டுவன் ஆ) நெடுஞ்சேரலாதன்

இ) குலோத்துங்கன் ஈ) பாண்டியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மொழிக்கு முதலில் வராத எழுத்து

அ) யி ஆ) ஆ இ) மு ஈ) கூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. நாவலந்தீவு என அழைக்கப்பட்ட நாடு

அ) மலேசியா ஆ) இலங்கை இ) இந்தியா ஈ) சீனா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கரியன் என்பது

அ) தெரிநிலைவினை ஆ) தன்வினை

இ) பிறவினை ஈ) குறிப்புவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. அச்சம் இன்றி ஆடிப்பாட ____________ வேண்டும் எனக் கவிஞர் கண்ணதாசன் கூறுகின்றார்.

அ) புகழ் ஆ) விடுதலை இ) பணம் ஈ) அன்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) உண் ஆ) வா இ) வரை ஈ) பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. எட்டுத்தொகை நூல்களுள் அடங்காத நூல்

அ) நற்றிணை ஆ) ஐங்குறுநூறு

இ) முல்லைப்பாட்டு ஈ) பரிபாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. மதுரையில் கழகம் அமைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்

அ) பாண்டியர் ஆ) சேரர் இ) சோழர் ஈ) நாயக்கர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் வரும் இடங்களில் வருவது

அ) அரைப்புள்ளி ஆ) முற்றுப்புள்ளி

இ) முக்காற்புள்ளி ஈ) காற்புள்ளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சோழர் கடல்கடந்து நாடுகளை ஆண்டனர். இதில் ஆண்டனர் என்பது

அ) அடைமொழி ஆ) எழுவாய்

இ) பயனிலை ஈ) செயப்படுபொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கனகவிசயரின் முடித்தலை நெரித்து கல்லினை வைத்தவன்

அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. மலர்களில் மதுவுண்ட வண்டுகள்

அ) கூவுகின்றன ஆ) கீச்சிடுகின்றன

இ) முரல்கின்றன ஈ) அலறுகின்றன

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. காவிரியாறு ________________________ என ஓடுகின்றது.

அ) கலகல ஆ) மளமள இ) விறுவிறு ஈ) சலசல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. குற்றியலுகரம் அல்லாதது

அ) பு ஆ) வு இ) சு ஈ) து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கணை என்ற சொல் குறிப்பது

அ) வேலை ஆ) ஈட்டியை இ) அம்பை ஈ) கத்தியை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. வாழ்நாளில் காணாத காட்சியொன்றைக் கண்டதாகச் சேரன் செங்குட்டுவனுக்கு கூறியவர்கள்

அ) அரசசுற்றத்தார் ஆ) மன்னர்கள்

இ) மலைவாழ்மக்கள் ஈ) கூத்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. தொடர் மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தங்கை ஆ) இராப்பகல்

இ) கானகம் ஈ) வேங்கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. உலகின் முதன்மொழி தோன்றிய இடம்

அ) அவுத்திரேலியாக்கண்டம் ஆ) குமரிக்கண்டம்

இ) ஆசியக்கண்டம் ஈ) அமெரிக்கக்கண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. நாடகமேடையாகக் காட்சியளித்த மருதநிலத்திலே எழினிகளாகத் தோன்றுபவை

அ) செந்தாமரைகள் ஆ) வெண்டாமரைகள்

இ) குவளைகள் ஈ) நீரலைகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. தமிழ்மேல் ஆணை என்ற பாடலைப் பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) உருத்திரமூர்த்தி

இ) காசிஆனந்தன் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பாண்டியரது கொடி

அ) விற்கொடி ஆ) புலிக்கொடி

இ) மீன்கொடி ஈ) வீணைக்கொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. தாய்நாட்டைக் காப்பதே நமது கடமை என்பதை விளக்கும் கண்ணதாசன் பாடல்

அ) காலங்களில் அவள் வசந்தம்......

ஆ) அதோ அந்தப் பறவைபோல......

இ) எந்தநாடு என்ற கேள்வியில்லை.....

ஈ) அச்சம் என்பது மடமையடா......

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஓ, போல, மற்று என்பன

அ) பெயர்ச் சொற்கள் ஆ) வினைச் சொற்கள்

இ) இடைச் சொற்கள் ஈ) உரிச் சொற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. மண்வெட்டி என்பது

அ) காரணப்பெயர் ஆ) சினைப்பெயர்

இ) காரணஇடுகுறிப்பெயர் ஈ) இடுகுறிப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று

அ) நெடுநல்வாடை ஆ) குறுந்தொகை

இ) திருக்குறள் ஈ) நாலடியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. கடலும் கடல்சார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வேரில் காய்க்கும் மரம்

அ) பலா ஆ) விளா இ) தோடை ஈ) மா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இயற்கையை அழகு மங்கையாக உருவகித்துப் பாடியவர்

அ) புகழேந்தி ஆ) பாவேந்தர்

இ) கண்ணதாசன் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தேடு என்பது

அ) வினையெச்சம் ஆ) விகுதி இ) பெயரெச்சம் ஈ) வினையடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கட்டுரையின் தலைப்பை விளக்குவது

அ) கருத்துரை ஆ) அணிந்துரை இ) முகவுரை ஈ) முடிவுரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

உலக அரங்கில் தமிழ் மொழி, தமிழினம் என்பவற்றின் பெருமையைப் பறைசாற்றும் ஒப்பற்ற நூலாகத் திகழ்வது தொல்காப்பியம். காலத்தால் முந்தியது எம் தாய்மொழி தமிழ் என்பதற்குத் தொல்காப்பியமும் ஒரு சிறந்த சான்றாகும். இது பழந்தமிழரின் நாகரிகம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றை நயமுற எடுத்துரைக்கும் நூலாகும். தொல்காப்பியத்திலிருந்து பண்டைத்தமிழரின் மொழியுணர்வையும் இனப்பற்றையும் அறியக்கூடியதாகவுள்ளது. எமது மொழியின் பெருமைகளை விதந்துரைக்கும் பண்பானது தொல்காப்பியத்தில் நிறைந்து காணப்படுகின்றது. இத்தகைய தொல்காப்பியத்தில் பாயிரம் தொடங்கி முடியும் வரைக்கும் ஐந்து இடங்களில் தமிழ் என்ற சொல்லாட்சி இடம் பெறுவதைக் காணலாம். தமிழ் கூறும் நல்லுலகத்து, செந்தமிழ் இயற்கை, தமிழ் என் கிளவியும், செந்தமிழ் நிலத்து, செந்தமிழ் சேர்ந்த என அவை அமைந்துள்ளன. இங்கு செம்மை என்ற ஓர் அடைமொழிச் சொல் மூன்று இடங்களிலும் வருவதை நோக்கலாம். தமிழைச் சிறப்பிப்பதற்காகவே தொல்காப்பியர் முதன்முதல் இச் சொல்லைக் கையாண்டுள்ளார். செம்மை என்ற சொல்லானது முழுமைபெற்ற, சிறப்புப்பொருந்திய, சீரிய நெறியில் இலங்குகின்ற என்ற கருத்துகளை உடையதாய் அமைந்துள்ளது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எம் மொழி செம்மொழியாகத் திகழ்ந்துள்ளது என்பதை நினைந்து நாம் பெருமையடைவோம்.

1. உலக அரங்கில் தமிழ்மொழி, தமிழினம் என்பவற்றின் பெருமையைப் பறைசாற்றும் ஒப்பற்ற நூலாகத் திகழ்வது எது?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. தொல்காப்பியத்திலிருந்து நாம் எவற்றை அறியக் கூடியதாகவுள்ளது?

___

___

___

3. தமிழைச் சிறப்பிப்பதற்காகத் தொல்காப்பியர் கையாண்ட சொல் எது?

___

___

___

4. தொல்காப்பியம் எவற்றை நயமுற எடுத்துரைக்கின்றது?

___

___

___

5. செம்மை என்ற சொல் எக்கருத்து உடையதாய் அமைந்திருக்கின்றது?

___

___

___

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்து நடந்தது எது என இளங்கோவடிகள் கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

2. காசிஆனந்தன் தமிழ்மொழிக்கு நாடமைக்கப் போவதாக எவற்றின் மீது ஆணையிடுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

3. கடலில் மூழ்கிப்போன குமரிக்கண்டம்பற்றிய செய்திகளைக் கூறும் நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

4. இளையோர் சூடார் வளையோர் கொய்யார் என்ற பாடல் யாரால் எதைப் பார்த்துப் பாடப்பட்டது?

_______________________________________________

5. இமயத்தில் இருந்து வந்த துறவிகள் செங்குட்டுவனுக்கு என்ன கூறினர்?

_______________________________________________

6. கழகக்கால ஆடவர் எதைப் பெரும்பேறாகக் கருதினர்?

_______________________________________________

7. திராவிடர் கழகத்தின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட கவிஞர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

**4) கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

தமிழா! நீ முடங்கிக்கிடக்கும்வரை எமக்கு விடுதலையேது
விழித்தெழு போராடு விடுதலை நம் கையில்

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. தோன்றா எழுவாய், தோன்றாப் பயனிலை என்பவை இடம் பெறுமாறு தனித்தனிச் சொல்லியம் எழுதுக.

தோன்றா எழுவாய்: ______________________________

______________________________

தோன்றாப் பயனிலை: ______________________________

______________________________

2. இடுகுறிப் பெயர் என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

3. அ. கருத்தடிப்படையில் சொல்லியங்கள் எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ. அவற்றில் ஏதாவது இரண்டிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

______________________________

4. குற்றியலுகரம் எத்தனை?

______________________________

பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

அ. வன்தொடர்க் குற்றியலுகரம் : - ______________________________

ஆ. இடைத்தொடர்க் குற்றியலுகரம் : - ______________________________

5. அ. உயிர் நெடில் எழுத்துகள் எத்தனை?

______________________________

ஆ. அவை எவை?

______________________________

| புள்ளிகள் 15 |
|---|

**6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

இந்த உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. ஒருவருக்குத் தாய்மொழியும் வாழிடமொழியும் நன்றாகத் தெரிந்திருத்தல் வேண்டும். இன்று நம்மிற் பலர் தமிழ்மொழி கற்பதை மிகவும் கடினமான ஒன்றாகக் கருதுகின்றோம். தமிழ் எங்கள் தாய்மொழி. ஒரு மொழியைக் கற்கும்போது இன்னொரு மொழியை மறந்துவிடுவோம் என்ற தவறான கருத்து எம்மிற் பலரிடையே காணப்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை நாம் கற்கும்போது எமது மொழியாற்றல் வளருமேயன்றித் தடைப்படாது. பன்மொழி அறிவானது எமக்குப் பல வழிகளிலும் நன்மையே தரும்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ சேரமான் வஞ்சினம்
- ✸ காடுகளும் அவற்றினால் ஏற்படும் நன்மை தீமைகளும்
- ✸ நீர் அறிந்த தமிழ்ப் புலவர்

புள்ளிகள் 20